ஜெபம் பண்ணி விழித்திருங்கள்

# பரம நம்பிக்கை

உமக்குப் பிரியமானதைச் செய்ய எனக்குப் போதித்தருளும் (சங். 143:10)

ESTD. : 1978

மலர் - 49 ஆகஸ்டு – 2026 இதழ் - 8

# நீதியின் வலது கரத்தினால் தாங்குகிற தேவன்

**(சகோதரி ரீட்டா ஏசாயா)**

**ஏசாயா 41:10 – நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாயம் பண்ணுவேன். என் நீதியின் வலது கரத்தினால் உன்னைத் தாங்குவேன்.**

வாசக நேயர்களே! மீண்டுமாய் இவ்விதழ் மூலம் உங்களைச் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறோம். கர்த்தர் நம்மை பெலப்படுத்தி நடத்தி வருகிற காரியங்களை இந்த ஆண்டு இந்த பத்திரிகை மூலமாக தியானித்து வருகிறோம். கடந்த மாதத்திலே அவர் நம்முடைய ஆத்துமாவை எவ்விதம் பெலப்படுத்துகிறார் என்று தியானித்தோம்.

இந்த இதழிலே அவருடைய நீதியின் கரம் நம்மை எவ்விதம் தாங்குகிறது என்பதை தியானிக்கப் போகிறோம். "என் நீதியின் வலது கரத்தினால் உன்னைத் தாங்குவேன்" என்று நமக்கு வாக்குரைத்த தேவன் அவருடைய பராக்கிரமம் செய்யும் வலது கரத்தினால் நம்மை தாங்குகிறார். அவருடைய கரம் நீதியுள்ளது. உத்தமனாய் நடந்து நீதியை நடப்பிக்கிறவர்கள் தான் அவருடைய இராஜ்ஜியத்தில் பிரவேசிக்க முடியும், நீதியாய் நடக்கிற தேவ பிள்ளைகளைத் தான் அவர் நீதியின் கரத்தினால் தாங்குவார். சத்தியத்தைக் கைக்கொண்டு வருகிற நீதியுள்ள ஜாதி உள்ளே பிரவேசிக்க வாசல்களைத் திறவுங்கள் என்று பார்க்கிறோம். (ஏசா 26:2)

நீதியுள்ள ஜாதிக்காக அவருடைய நீதியுள்ள கரத்தை நீட்டுகிறார். வேதாகமத்திலே நீதியுள்ள தேவ பிள்ளைகளை அவர் எவ்விதம் பாதுகாத்தார் என்பதை தியானிப்போம்.

**I. நோவா:**( ஆதி.6:9)

நோவா தன் காலத்தில் இருந்தவர்களுக்குள்ளே நீதிமானும் உத்தமனுமாயிருந்தான். மனுஷன் பாவம் செய்து ஏதேனை விட்டு தேவனால் துரத்தப்பட்டப்பின் அவர்கள் பூமியிலே பலுகி பெருகினார்கள். அவர்களுடைய அக்கிரமமும் பெருகினது. எனவே பூமியிலே மனுஷனை உண்டாக்கினதற்காக தேவன் மனஸ்தாபப்பட்டார். அது அவருடைய இருதயத்துக்கு விசனமாயிருந்தது. எனவே அவர்களை பூமியின் மேல் வைக்காமல் நிக்கிரகம் பண்ண தேவன் நினைத்தார். ஆனால் அவர்களுக்குள்ளே ஒரு மனுஷன் இருந்தான். அவன் நீதிமானும் உத்தமனுமாயிருந்து தேவனோடே சஞ்சரித்துக் கொண்டிருந்தான். எனவே அவனுக்கு தேவனுடைய கண்களில் கிருபை கிடைத்தது.

தேவன் நோவாவோடு பேசினார் "பூமி மிகவும் சீர்கெட்டதாயிருக்கிறது. எனவே பூமியின் மேல் மனுஷன் இராதபடி அவனை அழிக்கப் போகிறேன். நீ உனக்கு கொப்பேர் மரத்தால் ஒரு பேழையை செய்" என்றார். தேவன் சொன்னப்படி நோவா செய்தான். பூமியின் மேல் பெருமழை பெய்தது. பேழைக்குள்ளிருந்த நோவாவின் குடும்பத்தை தேவன் காப்பாற்றினான். பூமியின் மேல் இருந்த மனுகுலம் அழிந்து போகாதப்படிக்கு நீதிமானாகிய நோவாவை தம்முடைய நீதியின் வலது கரத்தினால் பாதுகாத்தார்.

அருமையான தேவ பிள்ளைகளே "நோவாவின் நாட்களில் நடந்தது போல மனுஷகுமாரனுடைய நாட்களிலும் நடக்கும். நோவா பேழைக்குள் பிரவேசிக்கும் நாள் வரைக்கும் ஜனங்கள் புசித்துக் குடித்தார்கள் பெண் கொண்டு கொடுத்தார்கள், ஜலப் பிரளயம் வந்து எல்லாரையும் அழித்துப்போட்டது' என்று இயேசு சொல்லுகிறார். (லூக்.17:26,27) அதுபோலவே இன்றும் நடக்கிறது. மனுஷ குமாரன் பூமியின் மேல் வரும்போது விசுவாசத்தைக் காண்பாரோ (லூக்கா 18:8) என்று சொல்லப்பட்டுள்ளது போல, சபைகளுக்குள்ளே, விசுவாச துரோகம் களியாட்டுகள் பெருகிவிட்டது. ஜனங்கள் பாவத்தோடு விளையாடிக் கொண்டிருக் கிறார்கள். பரிசுத்த ஜீவியம் புறக்கணிக்கப்பட்டுப் போய்க் காணப்படுகிறது. அவர்கள் நடுவிலே உத்தமனும் நீதிமானுமான நோவாவைப் போல நாம் காணப் படுவோமானால், வரப்போகிற பயங்கரமான காலத்திலே அவருடைய நீதியின் கரம் நம்மை தாங்கி தப்புவித்து மேன்மைபடுத்த வல்லமையுள்ளதாயிருக்கிறது. என் நீதியின் வலது கரத்தினால் உன்னைத் தாங்குவேன் என்று சொன்ன தேவன் நீதிமானாக காணப்படுகிற நம்மைத் தாங்குவாராக!

**II. லோத்து : (IIபேது. 2:6,9)**

அடுத்தபடியாக லோத்தைப் பார்க்கிறோம். லோத்து ஆபிரகாமோடு தன் தேசத்தை விட்டுப் புறப்பட்டு வந்தவன். இவர்களுடைய சொத்தை பூமி தாங்கக் கூடாதிருந்தது. இவர்கள் இருவருடைய மைந்தை மேய்ப்படுக்கும் பிரச்சனை உண்டானது. எனவே இவர்கள் இருவரும் பிரிந்தார்கள். லோத்து சோதோமைத் தெரிந்து கொண்டான். அது அவன் பார்வைக்கு கர்த்தருடைய தோட்டத்தைப் போலக் காணப்பட்டது. அங்கேப் போய்க் கூடாரம் போட்டான். ஆனால் அதின் நடுவில் உள்ள ஜனங்களின் பாவம் மிகவும் கொடிதாயிருந்தது. (ஆதி 18:20) அவர்கள் கூக்குரல் கர்த்தருடைய சமூகத்தில் பெரிதாயிருந்தது (ஆதி 19:12) அந்த ஜனங்கள் அக்கிரமக்காரர்களாயிருந்தார்கள். அதின் நடுவிலிருந்த நீதிமானாகி லோத்து அவர்களுடைய அக்கிரமக்கிரியைகளைக் கண்டு கேட்டு நீதியுள்ள தன்னுடைய இருதயத்திலே வாதிக்கப்பட்டான். அதை தேவன் கண்டார். அந்த அக்கிரமக்காரர்களை அழிப்பதற்காக கர்த்தர் தூதர்களை அனுப்பினார். அவர்கள் அந்த அக்கிரமக்காரர் நடுவிலிருந்த நீதிமானாகிய லோத்தின் குடும்பத்தை வெளியே அழைத்துக் கொண்டு வந்து அவர்களை உன் ஜீவன் தப்ப ஓடிப்போ. இந்த சம பூமியெங்கும் நில்லாதே என்று அவர்களை சோதோமை விட்டு அப்புறப்படுத்தி, வானத்திலிருந்து அக்கினியையும் கந்தகத்தையும் வருஷிக்கப்பண்ணி, அந்தப் பட்டணத்தை அழித்தார். (ஆதி 9:24) நீதிமானாகிய லோத்தை அவர் நீதியின் கரத்தினால் காப்பாற்றினார்.

அருமையான தேவ பிள்ளைகளே! லோத்தின் நாட்களில் நடந்தது போலவும் மனுஷகுமாரன் வரும் நாட்களிலும் நடக்கும். ஜனங்கள் புசித்தார்கள், குடித்தார்கள், கொண்டார்கள், விற்றார்கள், நட்டார்கள், கட்டினார்கள், லோத்து சோதோமை விட்டு புறப்பட்ட நாளிலே வானத்திலிருந்து அக்கினியும் கந்தகமும் வருஷித்து எல்லாரையும் அழித்துப் போட்டது.

இன்றும் அதுபோலவே நடந்து கொண்டிருக்கிறது. தெய்வபயம் இல்லாமல் ஜனங்கள் போய்க் கொண்டிருக்கிறார்கள். கர்த்தரின் நீதியின் வழிகளைச் சொன்னால் கேட்பதற்கு மனமில்லை. கீழ்ப்படிதலையோ பரிசுத்த ஜீவியத்தையோ பார்க்க முடியவில்லை. இவர்கள் நடுவிலிருந்து தங்கள் இருதயத்தில் வாதிக்கப்பட்டு தேவனை நோக்கி ஜெபிக்கிற நீதிமான்களாகிய தேவ பிள்ளைகளைக் கர்த்தர் சோதனையினின்று தப்புவித்து தம்முடைய நீதியின் வலது கரத்தினால் தாங்க வல்லமையுள்ளவராயிருக்கிறார்.

**III.ஆபிரகாம்,** (யாக்கோபு. 2:21–24)

கடைசியாக பார்ப்போமானால் ஆபிரகாம் ஆபிரகாமை தேவன் அழைத்தார். உடனே அவன் கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்துப் புறப்பட்டான். அவனுடைய வீட்டிலே எத்தனையோ பிரச்சனைகள் போராட்டங்கள் எல்லாம் வந்தது. எல்லாவற்றையும் கடந்து போனான். கடைசியாக நூறு வயதில் வாக்குத்தத்தம் பண்ணின குமாரனாகிய ஈசாக்கைக் கொடுத்தார். அதன் பின் கர்த்தர் அவனைச் சோதித்தார். அவனுடைய ஒரேப் பேரான குமாரனை பலியிடச் சொன்னார். ஆபிரகாம் அதற்கும் கீழ்ப்படிந்து அவனைக் கூட்டக்கொண்டு போய் பலிபீடம் கட்டி பலியிடப் போனான். அப்பொழுது கர்த்தர் அவனைத் தடுத்து பிள்ளையாண்டான் மேல் உன் கையைப் போடாதே என்றார். இந்த செயல் தேவனுடைய பார்வையில் நீதியாகக் காணப்பட்டது. (யாக்.2:21)

ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான். எனவே அவன் அவருக்குக் கீழ்ப்படிந்தான். அது அவனுக்கு நீதியாகக் காணப்பட்டது. அவன் தேவனுடைய சிநேகிதனெனப்பட்டான். (யாக்.2:23) ஆபிரகாமுக்குள் இருந்த கீழ்ப்படிதலும் தேவ பயமும் அவனை நீதிமானாக மாற்றினது. நீதிமானாகிய ஆபிரகாமின் சந்ததியை தேவன் வாக்குத்தத்தத்தின் சந்ததியாக பலுகிப்பெருகப் பண்ணினார். அவர்களே ஆசீர்வதிக்கப்பட்டவர்களும், அசைக்க முடியாதவர்களுமான சந்ததியாகக் காணப்படுகிறார்கள். அந்த சந்ததியிலே இயேசு கிறிஸ்துவும் பிறந்தார். ஆபிரகாமின் குமாரனாகிய தாவீதின் குமாரனான இயேசு கிறிஸ்துவின் வம்ச வரலாறு என்று இயேசுவின் பிறப்பு ஆரம்பிக்கிறது. (மத்.1:1)

அருமையான தேவ பிள்ளைகளே! ஆபிரகாம் விசுவாசிகளின் தகப்பன். அவனுடைய விசுவாசமும் கீழ்படிதலும் அவனை நீதிமானாக மாற்றினது. அவன் தேவன் தாமே கட்டியுண்டாக்கின அஸ்திபாரங்கலுள்ள நகரத்துக்குக் காத்திருந்தான் என்று சொல்லப்பட்டுள்ளது. (எபி.11:10) அதாவது அவன் எவ்வளவு பெரிய ஐசுவரியவனாயிருந்தாலும் தேவனுடைய இராஜ்ஜியத்துக்காகவேக் காத்திருந்தான்.

இப்படிப்பட்டப் பரிசுத்தவான்கள் பூமியின் மேல் தங்களை அந்நியரும் பரதேசிகளும் என்று அறிக்கையிட்டார்கள். கூடாரங்களில் குடியிருந்தார்கள். இப்படிப்பட்ட நீதிமானாகிய ஆபிரகாமை தேவன் தம்முடைய நீதியின் கரத்தினால் தாங்கினார்.

அருமையான தேவ பிள்ளைகளே! என் நீதியின் வலது கரத்தினால் உன்னைத் தாங்குவேன் என்று வாக்குப் பண்ணின தேவன், ஆபிரகாம், நோவா, லோத்து போன்ற நீதிமான்களைத் தம்முடைய நீதியின் கரத்தினால் தாங்கினது போல, இந்தக் கடைசி காலத்தில் உலகத்தினின்று வேறுபட்டு, நீதிமான்களாய் ஜீவிக்கிற உங்கள் ஒவ்வொருவரையும் தம்முடைய நீதியின் வலது கரத்தினால் தாங்கி ஆசீர்வதிப்பாராக! தேவ கிருபை நம் அனைவரோடும் இருப்பதாக!

# ஆசிரியர் கடிதம்

இனிய இயேசு கிறிஸ்துவுக்குள் அன்புள்ள பரம நம்பிக்கை பங்காளர்களே! உங்களுக்கு எங்கள் அன்பின் வாழ்த்துக்கள்.

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் இந்த வருடத்தின் ஏழு மாதங்களை கடந்து எட்டாவது மாதத்துக்குள்ளாக பிரவேசிக்கச் செய்த தேவனை நன்றியோடு துதிக்கிறோம்.

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் இம்மட்டும் எல்லா ஊழியங்களையும் செய்ய கர்த்தர் கிருபைக் கொடுத்து நடத்தி வருகிறார். அவருக்கே மகிமையுண்டாவதாக. கடந்த மாதம் நம்முடைய பத்திரிக்கையை விரும்பி படிக்கிற வாசகரும், சிப்பியில் முத்து வினா–விடைகளை எழுதுகிறவர்களுமான சகோதரி எமிமாராஜ் பால் அவர்கள் கர்த்தருக்குள் நித்திரையடைந்து விட்டார்கள் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் குடும்பத்துக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

கடந்த மாதத்திலே "நித்திய கிருபையுடன் உனக்கு இறங்குவேன்" ஏசா 54:8 என்ற வசனத்தைக் கர்த்தர் வாக்குத்தத்தமாகக் கொடுத்தார். அதன்படியே அவருடைய நித்திய கிருபையினால் தாங்கி நடத்திவந்தார். அவருக்கே மகிமையுண்டாவதாக!

இந்த மாதம் 15ம் தேதி சபையில் வழக்கமாக நடத்துகிற ஸ்தோத்திரக் கூட்டத்தை நடத்த வேண்டும். அதற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

வழக்கமாக நடக்கிற எல்லா ஊழியங்களும் தவறாமல் நடைபெறுகிறது. நீங்கள் இந்த இழக்கிய ஊழியத்தினிமித்தமாக பயன்பெறுவீர்கள் என்றால் உங்களுக்குத் தெரிந்தவர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள். தொடர்ந்து எங்களுக்காகவும் எங்கள் ஊழியங்களுக்காகவும் மாம்பத்தில் சீக்கிரமாக ஒரு ஆராதனை ஸ்தலம் கிடைக்கவும் ஜெபித்துக் கொள்ளுங்கள். தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!

இப்படிக்கு
உங்கள் அன்பு சகோதரி
**ரீட்டா ஏசாயா**

## அறிவிப்பு

வாசக நேயர்களே! உங்கள் அன்புக்காகவும் ஜெபத்துக்காகவும் நன்றி செலுத்துகிறோம். தொடர்ந்து கர்த்தருடைய பெரிதான கிருபையினால் பாஸ்டர் அவர்கள் விட்டுச் சென்ற எல்லா ஊழியங்களையும் செய்து வருகிறோம். ‘சிப்பியில் முத்து’ வினா – விடை அனுப்புகிற தேவ பிள்ளைகளும் காணிக்கை அனுப்புகிற தேவ பிள்ளைகளும் தயவு செய்து பழைய விலாசத்தை மாற்றி புது விலாசத்தில் எங்களோடு தொடர்பு கொள்ளுங்கள். உங்கள் ஜெபக் குறிப்புகளை இதே விலாசத்திற்கு அனுப்புங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம் நன்றி!

எங்கள் புதிய விலாசம்

**Sis. Rita Isaiah**
**214/2, AVA Palace,**
**Flat G1, V.G.N. Padma Avenue,**
**Kolapakkam**
**Chennai - 600 128.**
**Ph : 9384710267, 9789893830**

உங்கள் ஜெபமும் ஆதரவும் எங்களுக்குத் தொடர்ந்து இருப்பதாக! நன்றி.

**நீ போகும் இடமெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருக்கிறார்** – (யோசு. 1:9)

WATCH AND PRAY

*Jesus Christ is coming very soon! Are you ready?*

PARAMA NAMBIKKAI

(Estd. 1978)

Watch! Pray!! Be Holy!!!

AUGUST - 2026

# THE LORD'S NAME IS TO BE PRISED

From the rising of the sun to the place where it sets, the name of the Lord is to be praised. - Psalm 113:3

God is worthy to be praised. Praise the Lord's name from sunrise to sunset, all day long! As soon as we get up until we go to bed, we have to praise the Lord. The sun rises in the east and sets in the west. This pictures man's universal duty of worship God in praise; we have to give the Lord's name credit for everything He does in our lives and not take any credit ourselves. Praising God reconnects us with His greatness, goodness, and majestic presence while expressing gratitude towards him. It brings us closer to him, focusing on his perfect attributes, thus strengthening our faith and relationship with him. Praising God is expressing our love and admiration for him, it goes beyond hymns; it's heartfelt worship that should be reflected not only in our words but also in actions. We ought to praise God for his majesty, power, care for the lowly, dominion, and faithfulness. Overall, praising God reflects our obedience to his commandments and faithfulness.

In tribulations, remembering God's presence and worthiness of praise can be challenging, making it difficult to find reasons to praise Him. Remember, believers are not exempt from suffering. In our suffering, God's protection or deliverance may not always manifest in the ways we expected or desired. Even so, He stays with us through it all. Hannah has her womb closed by the Lord. She not only fervently praised the Lord throughout her adversity but also after the Lord blessed her with a child, Samuel. She praised the Lord by emphasizing His sovereignty and faithfulness. Leah praised God for conception. She conceived again, and bare a son: and she said, Now will I praise the Lord: therefore she called his name Judah. David praised God's greatness.

Great is the Lord, and greatly to be praised; and his greatness is unsearchable. But about midnight, as Paul and Silas were praying and singing hymns of praise to God, and the other prisoners were listening to them, Suddenly there was a great earthquake, so that the very foundations of the prison were shaken; and at once all the doors were opened and everyone's

*Please 'Pray' for a permanent place in Mambalam for our Parama Nambikkai Ministries and obey as God says for this ministry to help us. You can download our messages every month through e-magazine from my website www.risaiah.com to show others as you are blessed.*

www.risaiah.com Pastor R. Isaiah

shackles were unfastened. Friend, when you're bound in a hard, uncomfortable season, praise will set not only you free, but also those who are connected to and around you! When you praise, not only does it free up others to praise God, but it becomes one of the most effective forms of ministry and witnessing God. Many people can praise God when things are going well, but when it comes to a true blood bought believer no matter how bad the circumstances that stare them in the face may be, they will never let it dictate their praise. When others see you praising God in your hard season, they will know that you are not just one who goes to church and reads Bible, but one that believes that God is who He says He is and can do what He says He can do!

Praise heals the soul and calms the troubled spirit, it drives the devil away, it wins battles, it encourages the miraculous, it accelerates answer to prayer but here's the most important one, and we want to really understand this: praise brings an entrance into God's presence. Praise, combined with thanksgiving, gives us access to God. Enter into his gates with thanksgiving, and into his courts with praise: be thankful unto him, and bless His name. Praise Him in song. Praise Him in word. Let us offer the sacrifice of praise to God continually, that is, the fruit of our lips giving thanks to His name. Praise Him in prayer. With all my heart: and I will glorify thy name for evermore. Praise Him by the way we live. Whether therefore ye eat, or drink, or whatsoever ye do, do all to the glory of God. Praise Him with our witness.

We ought to praise the Lord for the salvation He has given us. We ought to praise the Lord for His answers to our prayers. We ought to praise the Lord for His blessings. We ought to praise the Lord for His protection. Oh that men would praise the Lord for his goodness, and for his wonderful works to the children of men. Let everything that hath breath praise the Lord. Praise ye the Lord. In life, we'll experience different suffering at different stages; what matters the most is our attitude during these times. Jehoshaphat says, we do not know what to do, but our eyes are on you. Regardless of the situation, praise God for His goodness and love. "From the rising of the sun to the place where it sets…". Praising God in both bad and good times expresses adoration and recognition of His greatness in our lives, strengthening our relationship with Him and drawing us near to his presence.- Amen.

**-Dr. S.Jehoashan Kingsly** Ph.D.,

## ATTENTION PLEASE

Your thanks giving testimonies, offerings, gifts, money orders are all welcomed, accepted and used for His Victorious ministry. Money may be sent through **net banking as in :**

**PARAMANAMBIKKAI MINISTRIES**
**(in India only)**
**CBS Code : 00073,**
**IFS Code: IDIB000A031**
**Current A/c. No.980288648**
**Indian Bank, Ashok Nagar, Chennai-83**

To My address:

Sis. Rita Isaiah
214/2, AVA Palace,Flat G1, V.G.N. Padma Avenue,
Kolapakkam, Chennai - 600 128.
**Ph : 044-24710267**
**Cell : +91 9384710267, 9789815830**
E-mail : pritaisaiah@gmail.com
Fax : 91-044-24710267
**Our website : www.risaiah.com**

# நம் நாவை காத்துக்கொள்வதினால் கிடைக்கின்ற ஆசீர்வாதங்கள்

கர்த்தருடைய பரிசுத்த நாமத்திற்கு மகிமை உண்டாவதாக! கடந்த மாதம் முழுவதும் கர்த்தர் நம்மை கண்மணியைப் போல் காப்பாற்றினார். இந்த மாதத்திலும் பரம நம்பிக்கை இதழின் மூலமாக உங்களைச் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

இன்றைக்கு நாம் தியானிக்கப்போகிற தேவனுடைய வார்த்தை என்னவென்றால், நமது நாவை காப்பது ஏன் முக்கியம் மற்றும் அதனால் கிடைக்கும் ஆசீர்வாதங்கள் என்ன என்பதைப் பற்றி சற்று தியானிப்போம்.

**1. நாவை காப்பவன் தன் உயிரைக் காக்கிறான் (நீதி 13:3) :**

நீதி 13:3ல் நாம் தியானிக்கும்போது "தன் வாயைக் காக்கிறவன் தன் பிராணனைக் காக்கிறான்; தன் உதடுகளை விரிவாய்த் திறக்கிறவனோ கலக்கமடைவான்" என்று வேதம் கூறுகிறது. தேவையில்லாத வார்த்தைகள் நமக்கு மிகப்பெரிய அழிவைக் கொண்டுவரும். நாவை கட்டுப்படுத்துவதினால் நம் ஜீவனைக் காக்கிறோம். நமது வாயிலிருந்து வரும் வார்த்தைகளில் கவனமாய் இருக்கும்போது, பல ஆபத்துகள், மன உளைச்சலிலிருந்து நம்மை தற்காத்துக் கொள்ள முடியும்.

**2. நாவை காப்பவன் ஆசீர்வாதமான நல்ல நாட்களை காண்பான் (நல்வாழ்வு) I பேதுரு 3:10**

I பேதுரு 3:10ல் நாம் தியானிக்கும் போது "ஜீவனை விரும்பி, நல்ல நாட்களைக் காண வேண்டும் என்றிருக்கிறவன் பொல்லாப்புக்கு நாவையும், கபடத்துக்குத் தன் உதடுகளையும் விலக்கிக் காத்து " என்று கூறுகிறது. நமது வாழ்க்கையில் பூமியில் மகிழ்ச்சியாகவும், சமாதானத்தோடும் வாழ வேண்டும் என்று விரும்பினால், பொல்லாப்புக்கு தன் நாவையும் அதாவது, மற்றவர்களைப் பற்றி தீமையை பேசுவது பொய் பேசுவதைத் தவிர்த்து, கபடத்துக்கு தன் உதடுகளைம் விலக்கிக் காத்து, எல்லாவற்றிற்காகவும், எப்பொழுதும் ஸ்தோத்திரம் செய்வதினால் தான் நாம் வாழ்க்கையில் நல்ல நாட்களைக் காணவும், தேவனுடைய ஆசீர்வாதத்தையும் பெற்றுக்கொள்ளவும் முடியும்.

**3. நாவை காப்பவன் ஆத்துமாவை இடுக்கண்களிலிருந்து விலக்குகிறான் (நீதி. 21:23)**

நீதி 21:23ல் நாம் தியானிக்கும்போது, தன் வாயையும் தன் நாவையும் காக்கிறவன் தன் ஆத்துமாவை இடுக்கண்களுக்கு விலக்கிக் காக்கிறான் என்று கூறுகிறது. இங்கு "காக்கிறவன்" என்று வார்த்தைகளை தியானிக்கும்போது நாம் பேசும்போது மிக கவனமாக பேச வேண்டும். தேவையற்ற, புண்படுத்தும், பொய்யான, கோபமான அவதூறான வார்த்தைகளை நாம் பேசாமல் தன் நாவை காக்க வேண்டும். அப்போது நாம் நம் ஆத்துமாவை பல இடுக்கண்களிலிருந்து காத்து கொள்ள முடியும். அநேக துன்பங்கள் நமக்கு நமது வார்த்தைகள் மூலமாகவே வருகிறது. அவைகளை நாம் தவிர்க்கும் போது, பல பிரச்சனைகளை தடுத்து நிறுத்த முடியும். நாவை அடக்கும்போது, சாத்தான் நம் பேச்சின் மூலம் வைக்கும் கண்ணிகளில் இருந்து நம் ஆத்துமா தப்பிக்கிறது.

**4 நாவை காப்பவன் பக்தியுள்ளவனா யிருக்கிறான். யாக்.1:26**

யாக்.1:2 நாம் தியானிக்கும்போது "உங்களில் ஒருவன் தன் நாவை அடக்காமல், தன் இருதயத்தை வஞ்சித்து, தன்னை தேவ பக்தியுள்ளவனென்று எண்ணினால் அவனுடைய தேவ பக்தி வீணாயிருக்கும். நாம் எவ்வளவுதான் ஜெபித்தாலும், வேதம் வாசித்தாலும் நம் நாவைக் கட்டுப்படுத்தாவிட்டால் நம் பக்தி வீணானது என்று வேதம் கூறுகிறது. ஒரு கிறிஸ்தவ விசுவாசியின் உண்மையான அடையாளம், தன் நாவை அடக்கி ஆள்வதுதான். நாம் பெருமையானவைகளை பேசினாலோ, மற்றவர்களை அவதூறாக பேசினாலோ,

மற்றவர்களை இழிவாக பேசினாலோ, தூஷித்தாலோ நாம் நம்மை தேவப் பக்தியுள்ளவர்கள் என்று கூற முடியாது" என்று வேதம் போதிக்கிறது. நாம் பக்தியுள்ள தேவ பிள்ளைகளென்றால், பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமலும், ஆகாத சம்பாஷனை நல்லொழுக்கங்களை கெடுக்கும் என்ற வேத வசனத்தின்படி நாம் நம் நாவை கர்த்தருக்கு பிரியமில்லாதவைகளுக்கு விலக்கி காத்துக் கொள்ள வேண்டும்.

**5. நாவை காப்பவன் நியாயத் தீர்ப்புக்கு தப்புவித்து கொள்வான் (மத்.12:37)**

மத்தேயு 12:37ல் நாம் தியானித்தால் "ஏனெனில் உன் வார்த்தைகளினாலே நீதிமான்" என்று தீர்க்கப்படுவாய்; அல்லது உன் வார்த்தைகளினாலே குற்றவாளி என்று தீர்க்கப்படுவாய்" என்று வேதம் கூறுகிறது. நாம் பேசும் ஒவ்வொரு வீணான வார்த்தைக்கும் நியாயத் தீர்ப்பு நாளில் கணக்கு ஒப்புவிக்க வேண்டும். யாக்.3:6, நாவானது முழுச்சாரத்தையும் கறைப்படுத்தி, ஆயுள் சக்கரத்தைக் கொளுத்திவிடுகிறதாயும், நரக அக்கினியால் கொளுத்தப்படுகிறதாயும் இருக்கிறது. நாவை அடக்க ஒரு மனுஷனாலும் கூடாது, அது அடங்காத பொல்லாங்குள்ளதும் சாவுக்கேதுவான விஷம் நிறைந்தது மாயிருக்கிறது என்று யாக்கோபு கூறுகிறார் நாம் பரிசுத்த ஆவியானவரின் உதவியோடு நாம் நமது நாவை காத்துக்கொள்வோம். மத். 12:34ல் கூறியப்படி "இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும்" நாம் பரிசுத்த ஆவியினால் நிறைந்து இருந்தால் தேவன் நம்மை தேவையற்ற காரியங்களை பேசாதப்படி காப்பார். பெரிய நரக ஆக்கினைக்கு தப்பித்து, ஆசீர்வாதங்களை பெறுவோம். பிரியமான தேவ பிள்ளைகளே, நாம் பேசுவதற்கு முன்பாக இந்த வார்த்தை தேவையா, இதை பேசுவதினால் பிறருக்கு என்ன பிரயோஜனம் என்று சிந்தித்து பேச வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக, நாம் நமது சுயபெலத்தால் நாவை அடக்குவது கடினம். தேவ பெலத்தால் கிருபையால் மட்டுமே அது சாத்தியமாகும். சங்.141:3 வேதம் கூறுகிறது "கர்த்தாவே என் வாய்க்கு காவல் வையும்; என் உதடுகளின் வாசலைக் காத்துக் கொள்ளும்" என்று நாம் ஜெபிக்க வேண்டும். சங்.19:14 நாம் தியானித்தால் தாவீது ராஜா "என் கன்மலையும் என் மீட்பருமாகிய கர்த்தாவே, என் வாயின் வார்த்தைகளும், என் இருதயத்தின் தியானமும், உமது சமூகத்தில் பிரிதியாயிருப்பதாக" என்று அனுதினமும் ஜெபிக்கிறார். நாமும் நமது நாவை தேவன் காத்துக்கொள்ள தேவனிடத்தில் மன்றாடி ஜெபிப்போம். தேவ ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்வோம்.

**உங்கள் பிரயோஜனத்துக்காக**
**யூடியூப் (You Tube) :-**
Paramanambikkai Messages
Paramanambikkai Songs
Paramanambikkai Ministries
**பாருங்கள்**

**இடத்திற்காக**

மாம்பலத்தில் பரம நம்பிக்கை ஊழியங் களுக்கான ஒரு நிரந்தர இடத்தைக் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சீக்கிரமாக தர, அதிசயம் நடக்க, தேவ நாமம் மகிமைப்பட, பரிசுத்தாவியானவர் ஜெயம் தர ஜெபித்துக் கொள்ளுங்கள். – **www.risaiah.com**

**உங்கள் கவனத்திற்கு**

உன்னதப்பாட்டு – விளக்கவுரை சகோதரி ரீட்டா ஏசாயா எழுதியதைக் கொண்டு பரிசுத்தாவியானவர் கிரியை செய்து ஆத்துமாக்கள், சபைகள், தேவனுடைய நாளுக்கு ஆயத்தப்பட, நற்கிரியைகளைச் செய்ய ஸ்தோத்திரத்தோடு ஜெபித்துக் கொள்ளுங்கள். புத்தகம் தேவைப்படுவோர் **'Word of Christ'** விற்பனையாளரிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு வாங்கி பயனடையுங்கள் **(Phone Number 044-26613242)**. பரமநம்பிக்கை ஊழியங்களுக்காக, விசுவாசிகளின் சுவிசேஷ ஐக்கியத்திற்காக ஸ்தோத்திரத்தோடு ஜெபித்துக் கொள்ளுங்கள்.

***www.risaiah.com*** *இணையதளம் மூலமாக அநேகர் மனந்திரும்பி, இரட்சிக்கப்பட்டு, புதுப் பிக்கப்பட (இரட்சிப்பு) இந்நாட்களில் "ஜெபியுங்கள்". நீங்களும் இந்நாட்களை பிரயோஜனப்படுத்திக் கொள்ள இச்செய்தியை உங்களுக்கு பகிர்ந்து கொள்ளுகிறேன்!* –போதகர் ஆர்.ஏசாயா

## சிப்பியில் முத்து

**கடந்த மாத சிப்பியில் உள்ள முத்துக்கள்:**

| | | |
|---|---|---|
| 1. | யோனத்தான் | – I சாமு 18:1 |
| 2. | எலியா | – Iஇரா. 19:4 |
| 3. | யோபு | – யோபு 6:7 |
| 4. | சிம்சோன் | – நியா 16:16 |
| 5. | எலிசா | – II இரா 4:27 |
| 6. | தாவீது | – சங்.35:13 |
| 7. | யோவான் | – III யோ. 1:2 |
| 8. | தாவீது | – சங. 6:4 |
| 9. | யோபு | – யோபு 10:1 |
| 10. | தாவீது | – சங்.25:20 |

**கடந்தமாத சிப்பியில் உள்ள முத்துக்களைச் சரியாக கண்டெடுத்தவர்கள்:**

| | | |
|---|---|---|
| 1. | சகோ.மெர்ஸி கிங்ஸ்லி | – கொளப்பாக்கம் |
| 2. | சகோ. தங்கம் ஐசக் | – வேலூர் |
| 3. | சகோ.சரோஜினி கோயில்பிச்சை | – பாளையங்கோட்டை |
| 4. | சகோ. லில்லி புஷ்பம் | – மாம்பலம் |
| 5. | சகோ. ரதி ஜாய்ஸ் | – கே.கே.நகர் |
| 6. | சகோ. பிரேமா ஜெயசேகர் | – வானகரம் |
| 7. | சகோ. ராதா | – பெருமாள்புரம் |
| 8. | சகோ. எசேக்கியேல் குமரன் | – புளியந்தோப்பு |
| 9. | சகோ. மேரி புஷ்பம் | – துரைபாக்கம் |
| 10. | சகோ. கிப்ஸ்சன் ஜோசுவா | – நாசரேத் |
| 11. | சகோ. ரெஜினா வின்சென்ட் | – பெங்களூர் |
| 12. | சகோ. எஸ்தர் டேவிட் | – கொளத்தூர் |
| 13. | சகோ. எஸ்தர் பானு | – பொழிச்சலூர் |
| 14. | சகோ. சித்ரா | – பெங்களூர் |
| 15. | சகோ. ஜெபா பெனியேல் | – எம்.ஜி.ஆர். நகர் |
| 16. | சகோ. மார்கிரேட் ஜோ | – கோவை |
| 17. | சகோ. பெர்சிஸ் | – வேளச்சேரி |
| 18. | சகோ.வசந்த் கமாலியேல் | – சௌதி அரேபியா |
| 19. | சகோ. புனிதா அசரியா | – அண்ணா நகர் |
| 20. | சகோ. இராஜகுமாரி | – எம்.ஜி.ஆர்.நகர் |
| 21. | சகோ. எப்சி இம்மானுவேல் | – எம்.ஜி.ஆர்.நகர் |
| 22. | சகோ. சுலோச்சனா | – எம்.ஜி.ஆர்.நகர் |
| 23. | சகோ. ஷிபா ஞானதுரை | – கோவை |
| 24. | சகோ.ஷேரன் நிர்மல்குமார் | – திருப்பத்தூர் |
| 25. | சகோ. வைலட் பியூலா | – பெருமாள்புரம் |
| 26. | சகோ. எமிமா | – பொழிச்சலூர் |
| 27. | சகோ. பாலின் அன்பழகன் | – மயிலாப்பூர் |
| 28. | சகோ. ரெஜினா மேரி | – பெருமாள்புரம் |
| 29. | சகோ. தங்கத்தாய் | – பெருமாள்புரம் |
| 30. | சகோ. ஞானஜோதி | – மதுரை |
| 31. | சகோ. கேத்தரின் கவிதா | – திருவண்ணாமலை |
| 32. | சகோ. சிப்போராள் எபனேசர் | – மாம்பலம் |
| 33. | சகோ. அருணா | – வண்டலூர் |

உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டாக, சரியான முத்துக்களை முயற்சித்து எடுத்துத் தந்த உங்களுக்கு "வரிசை பிரகாரம் முதலில் பதில் அனுப்புபவர்கள் வரிசைப் படுத்தப்படுகிறீர்கள்", உங்களுக்கு எங்கள் அன்பான பாராட்டுக்கள்! சரியான முத்துக்களை எடுக்க முடியாதவர்களும் இவ்விதழிலே "முயற்சித்துப் பாருங்கள்." வெளிநாட்டு, உள்நாட்டு வாசகர்கள் முத்துக்களை isaiahr@hotmail.com இ-மெயிலிலும் அனுப்பலாம். ஒவ்வொரு மாதமும் 20-ம் தேதிக்குள் பதில் எழுதியனுப்பி எங்களை சந்தோஷப்படுத்துங்கள்.

## இம்மாத சிப்பிகள்

1. யாருடைய வீடு அலங்கத்தின் மதிலில் இருந்தது ?
2. ஞான திருஷ்டிக்காரன் வீடு எங்கே சொல்லும் என்று கேட்டவன் யார் ?
3. நான் எம்மாத்திரம் என் வீடும் எம்மாத்திரம் என்றது யார் ?
4. அவனுடைய நம்பிக்கை சிலந்தி பூச்சி வீடு போலிருக்கும் என்றது யார் ?
5. இந்த வீடு பாழாய்க் கிடக்கும் போது, நீங்கள் மச்சுப் பாவப்பட்ட உங்கள் வீடுகளில் குடியிருக்கும் படியான காலம் இதுவோ ? என்ற தீர்க்கத்தரிசி யார் ?
6. யாருடைய வீடு ஜெப ஆலயத்திற்கு அடுத்ததாய் இருந்தது ?
7. கைவேலையில்லாத நித்திய வீடு பரலோகத்திலே நமக்கு உண்டு என்றது யார் ?
8. பேதுரு சிறைசாலையிலிருந்த விடுவிக்கப்பட்டவுடன் யாருடைய வீட்டுக்குப் போனான் ?
9. இன்றைக்கு இந்த வீட்டுக்கு இரட்சிப்பு வந்தது என்று இயேசு யாரிடம் கூறினார் ?
10. வீட்டின் மேற்கூரையைப் பிரித்து திறப்பாக்கி யாரை உள்ளே இறக்கினார்கள் ?

*குறிப்பு: உங்களுக்கு தெரிந்த மக்களுக்கு நமது பத்திரிகையை வாசிக்க, அறிமுகப்படுத்த எனது* **www.risaiah.com "E-Magazine"** *சென்று கீழ் இறக்கம்* **(Down Load)** *செய்து பெற்றுக் கொள்ளுமாறு தெரியப் படுத்துங்கள். அந்தந்த மாதத்திற்கு உரியது மட்டும் கீழ் இறக்கம் செய்யலாம்* **(Download)** *தொடர்ந்து எங்களுக்காக ஜெபியுங்கள்.* **ஆத்துமாக்கள் சாந்தி சமாதானம் அடைவார்களாக!** *புதிய விலாசங்களை எங்களுக்கு தெரியப்படுத்துங்கள்.*

**PRINTED BOOK** Book-Post
(Private Circulation Only)

To

If undelivered return to :
**Parama Nambikkai**
P.B. No.3276, Chennai - 600 033, South India.

**காணிக்கை ரூ.50.00**

Printed by Mr. Devavaram, Meipporul Achakam, 278, K.H. Road, Ayanavaram, Chennai - 600 023.
Published and editored, Owned by Sis. Rita Isaiah from at 23, Kodambakkam Road, West Mambalam, Chennai-33. for Paramanambikkai Ministries Trust.